**வட மத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ம் வகுப்பின் 1 (அ) தரத்திற்கு பாடசாலை மட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரிகளையும் ஆட்சேர்ப்புச் செய்தல்; - 2022;**

கல்வி அமைச்சின் செயலாளரின் இல ED/02/29/21/AI/01/2020 மற்றும் 2021.12.31 திகதியுடைய கடிதம் மற்றும் 2021.04.19 திகதியுடைய இல wum/21/0658/340/013 இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானம் , 2021.12.21 திகதியுடைய இல wum/21/3076/315/003-1 இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானம் , அதி விசேட வர்த்தமானி இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 திகதியுடைய இலங்கை ஆசிரியர் பிரமானத்தின் நடைமுறைகளுக்கேற்ப வட மத்திய மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக 1/2016 சுற்று நிருபத்தில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தொகையின் அடிப்படையில் 2022.06.30 ஆம் திகதி அன்று நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் 1993 க்காக பாடசாலை மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. இந்தப் பதவிக்காக பின்வரும் உத்தியோகத்தர் குழுவிற்கு மாத்திரம் விண்ணப்பிக்க் முடியும்.
   I. **பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அனைத்து பட்டதாரிப் பயிலுனர்கள்.**
   II. **2018 ம் மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட “பயிலுனர் பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்**” எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிலுநர் பட்டதாரிகளாக பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2020.01.01 மற்றும் 2021.01.01 ஆம் திகதியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற குழுவினர்.
   III. டிப்ளோமாதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பாடங்களுக்காக 2018, 2019, 2020 குழுவினர்களில் டிப்ளோமாதாரிகள்.

02. சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடங்களுக்காக பாடசாலை மட்டத்தில் பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரிகளையும் ஆட்சேர்ப்பு செய்வதுடன் குறிப்பிட்ட பாடசாலைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும். உரிய விண்ணப்பங்களை முன்வைக்கும் போது முன்னுரிமை அடிப்படையில் அதி கூடியது 03 பாடசாலைகளுக்கு மட்டுமேயாகும். விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் எண்ணிக்கை 03 ஆகும். அப் பாடத்திற்குரியவாறு மாகாணத்தில் ஏதாவது 03 பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பிக்கலாம். ஓவ்வொரு பாடசாலைகளுக்கும் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் உரிய பாடங்களுக்கான வெற்றிடங்கள் இணைப்பில் காட்டப்பட்டுள்ளது. (வெற்றிடப் பட்டியல் இணைப்பு 01 ல் காட்டப்பட்டுள்ளவாறு).

03 விண்ணப்பித்துள்ள பாடத்திற்கான செய்முறைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்/ புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரி விண்ணப்பித்துள்ள ஏனைய பாடசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.(செயன்முறைப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்துள்ள பாடசாலைக்கு போதுமான புள்ளிகள் காணப்படாத போது விண்ணப்பப்படிவத்தின் 9.4 இலக்கத்தில் வழங்கப்பட்ட சம்மதத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளில் இருந்து தகுதியானவர்கள் குறித்த பாடங்களுக்கு வெற்றிடம் நிலவுகின்ற மாகாணத்தின் ஏனைய எந்தப்பாடசாலைக்கும் நியமனம் வழங்கும் அதிகாரம் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு உள்ளது)